தமிழ் இணையக் கல்விக்கழகம்
சென்னை - 600 025.

இளநிலைத் தமிழியல் - பட்டம் **(B.A. TAMILOLOGY - Degree)**

நான்காம் பருவம்

நேரடி எழுத்துத் தேர்வு **(OFF - LINE WRITTEN EXAMINATION)**

மே, சூன் - **2015**

**P204** இதழியல்

காலம் : 3 மணி நேரம் மதிப்பெண்கள் : 75

(குறிப்பு : பிரிவு - 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு - 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு - 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

பிரிவு - 1

ஒரு சொல் / தொடரில் விடை தருக. **(15x1=15)**

1. எழுத்து அளவை என்ன பெயர் கொண்டு அழைப்பர்?
2. நாளிதழில், தலையங்கம் பொதுவாக எந்தப் பக்கத்தில் அமைகிறது?
3. விளம்பரங்கள் இதழ்களை நடத்துவதற்கு உதவுகின்றனவா?
4. செய்திப்படிகளை அச்சிடுவதற்கு ஏற்றாற் போல் மாற்றியமைப்பதை எப்படி அழைப்பார்கள்?
5. தாம் அனுப்பும் செய்திகளுக்கேற்ப ஊதியம் பெறுபவர் யார்?
6. பாரதிதாசன் பத்திரிக்கையை எதற்கு ஒப்பிடுகிறார்?
7. ‘செய்தி என்பது எது?’ என்று வரையறை செய்யும் இதழியல் அறிஞர் யார்?
8. செய்தித்தாளில் பொதுவாக எத்தனை பத்திகள் அமைகின்றன?
9. ஆப்செட் முறையில் வண்ணப் படங்களை அச்சிட முடியுமா?
10. அச்சில் இடைவெளி விடவேண்டாம் என்பதற்கு என்ன குறியீடு?
11. திருத்தக் குறியீடுகளை எத்தனை வகைகளாகப் பிரிக்கலாம்?
12. சிறப்புக் கூறுகள், கட்டுரைகள் ஆகியவற்றை யார் யார் எழுதுவர்?
13. இதழியல் மொழிநடையில் செயப்பாட்டு வினையைப் பயன்படுத்தலாமா?
14. விமோசனம் இதழின் சிறப்பு நோக்கம் யாது?
15. உலகின் மிகப் பழைய இதழ் எது?

## பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.** **(5x3=15)**

1. நாளிதழ்களின் உள்ளடக்கம் எப்படி இருக்க வேண்டும்?
2. இதழ்களில் தலையங்கம் – குறிப்பு வரைக.
3. கருத்துத் துணுக்குகள் பற்றிச் சுருக்கமாகக் கூறுக.
4. தொடக்க காலத்தில் அச்சுக்கலை எப்படி இருந்தது?
5. இன்றைய அறிவியல் வளர்ச்சியில் படங்களைப் பதிப்பிக்கும் பல்வேறு முறைகள் யாவை?
6. செய்திக் களங்கள் என்றால் என்ன?
7. செய்தி நிறுவனங்கள் – சிறு குறிப்பு தருக.
8. துணை ஆசிரியர்களின் பணிகள் என்னென்ன?

## பிரிவு - 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.** **(3x15=45)**

1. (அ) இதழ்களின் நடத்தை விதிகளும் சட்டங்களும் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) இதழியல் சுதந்திரம் பற்றி அறிஞர்களின் கருத்துக்கள், வரையறைகள், இடர்ப்பாடுகள், இந்திய இதழியல் சுதந்திரம் ஆகியவை பற்றிக் கட்டுரை வரைக.

2. (அ) செய்தி எழுதுதலும் செம்மையாக்கமும் பற்றி விரிவாக எழுதுக.

(அல்லது)

(ஆ) இதழ்களில் மொழிநடையும், திருத்தமும், தவிர்த்தலும் எப்படி இருக்க வேண்டும் என்பதை விளக்கமாக எழுதுக.

3. (அ) விளம்பர வகைகள் பற்றி விரிவாக எழுதுக.

(அல்லது)

(ஆ) இந்திய இதழ்கள், தமிழ் இதழ்கள் ஆகியவற்றின் தோற்றம், வளர்ச்சி பற்றிக் கட்டுரை வரைக.

✲✲✲